ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1821/3 - 2013 ජූලි මස 29 වැනි සඳුදා - 2013.07.29

*1821/3 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

மதுவரி அறிவித்தல் இல. 958

**மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) இனை உள்நாட்டில் விடுவித்தல்/இறக்குமதி செய்வதன் பேரிலான மதுவரி**

*காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், கீழ் குறிப்பிடப்படும் கட்டளையினை பிரகடனப்படுத்துகிறேன்.*

*2013, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதிய 1804/16 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி யில் பிரசுரிக்கப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 957 இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2013, யூலை 29.

**கட்டளை**

*1. இதனகத்துக்குப் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் நிரல் I இல் குறிப்பீடு செய்யப்பட்ட பொருட்கள் மீது அவற்றிற்கு நேரொத்த வகையில், அவ்வட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட விகிதத்திற்கு அமைவாக அட்டவணையின் III ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளதனைப் போன்று, 2013, யூலை மாதம் 31 ஆந் திகதி முதல் பயன் வலுப்பெறும் வகையில் மதுவரியொன்று விதிக்கப்படுதல் வேண்டும் என்பதுவும்.*

*2. ஏதேனும் பிற அறிவித்தல்களுக்கு எதுவும் முரண்படாத வகையில் அத்தகைய மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது வடிசாலையிலிருந்து, மொத்த களஞ்சியசாலையிலிருந்து உள்ளூர் உற்பத்திசாலையிலிருந்து விடுவிக்கப்படும் போது இவ்வரிகள் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுவும்.*

### அட்டவணை

| | நிரல் I<br>விடயம் | நிரல் II<br>மாதமொன்றிற்கு உள்ளூரில் விடுவிக்கப்படும்/இறக்குமதி செய்யப்படுகின்ற லீற்றர் அளவு | நிரல் III<br>தீர்வை விகிதம் (தொகை லீற்றர் ஒன்றுக்கு ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | உள்நாட்டில் விநியோகித்தல் | இறக்குமதி |
| 1. | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆராச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள், மருத்துவ மனைகள் மற்றும் அரச திணைக்களங்களினால் பயன்படுத்தப்படுகின்ற (ஈதைல் அற்ககோல்) மதுசாரம் | (i) லீற்றர் 100 வரை<br>(ii) லீற்றர் 500 வரை<br>(iii) லீற்றர் 10,000 வரை<br>(iv) லீற்றர் 20,000 வரை<br>(v) லீற்றர் 20,000 க்கு மேல் | இல்லை<br>இல்லை<br>ரூபா 350/=<br>ரூபா 450 /=<br>ரூபா 800/= | இல்லை<br>ரூபா 50/=<br>ரூபா 400/=<br>ரூபா 500/=<br>ரூபா 900/= |
| 2. | முடிவுப் பொருட்கள் , மதுவரித் தீர்வைக்கு உட்படாத, மருந்துப் பொருட்கள் மற்றும் கைத்தொழில் உற்பத்திகளுக்காகப் பயன்படுத்தப்படும் (ஈதைல் அற்ககோல்) மதுசாரம்<br>(மீள் வடிப்புக்காக பயன்படுத்தப்படுகின்ற ஸ்பிரித்துகளைப் பொறுத்த வரையிலும் இந்நிபந்தனை ஏற்புடையதாதல் வேண்டும்). | (i) லீற்றர் 500 வரை<br>(ii) லீற்றர் 10,000 வரை<br>(iii) லீற்றர் 20,000 வரை<br>(iv) லீற்றர் 20,000 க்கு மேல் | இல்லை<br>ரூபா 350/=<br>ரூபா 450 /=<br>ரூபா 800/= | ரூபா 75/=<br>ரூபா 400/=<br>ரூபா 500/=<br>ரூபா 900/= |
| 3. | மதுபான உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் (ஈதைல் அற்ககோல்) மதுசாரம் | லீற்றர் ஒவ்வொன்றிற்கும் | ரூபா 100/= * | ரூபா 200/= * |
| 4. | சுத்திகரிக்கப்படாத ஈதைல் அற்ககோல் மதுசார வகைகள் (தொழில்நுட்ப மதுசாரம்/பலம் குறைந்த மதுசாரம்) | லீற்றர் ஒவ்வொன்றிற்கும் | ரூபா 225/= | ரூபா 875/= |

* உள்நாட்டில் கொள்வனவின் பேரில்/இறக்குமதியின் பேரில் மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) இற்காக அறவிடப்படுகின்ற இவ்வரியானது, அவற்றினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்கள் பேரில் குறித்த மதுவரியினை செலுத்தும் போது ஈடுசெய்வதற்கு முடியுமான பிடிவரியொன்று அறவிடப்படும்.

8 - 572

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.